## 236 மாணவர்களையும், 92 ஆசிரியர்களையும் 6 நாடுகளுக்கு அழைத்துச் சென்ற கல்வி அமைச்சர்

# அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, அக்.22-

திராவிடமாடல் அரசின் முன்னெடுப்பாக 236 மாணவர்களையும், 92 ஆசிரியர்களையும் 6 நாடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ள பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு வாழ்த்து என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:-

**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு! கடல் தாண்டி நாம் பெறும் பெருஞ்செல்வம் கல்வியைத் தவிர வேறொன்று உண்டா? அத்தகைய கல்வியின் சிறப்பை நமது தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களும் ஆசிரியப் பெருமக்களும் உணர்ந்து கல்வி வேட்கை கொள்ள மேற்கொள்ளும் நமது திராவிட மாடல் அரசின் சிறப்பான முன்னெடுப்பு.**



**இந்தப் பதிவு குறித்து நான் தம்பி அன்பில் மகேஸ் அவர்களிடம் பேசிய போது, இதுவரையில் எத்தனை மாணவர்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ளோம் எனக் கேட்டேன். ஆறு நாடுகளுக்கு 236 மாணவர்களை அழைத்துச் சென்றுள்ளதாகவும் இந்தப் பயணத்துடன் 92 ஆசிரியர்களும் இந்த வாய்ப்பினைப் பெற்றதாகவும் கூறினார்.**

**இதைக் கேட்டதும் மகிழ்ச்சியால் என் நெஞ்சம் நிறைந்தது! இந்த முன்னெடுப்புகளைச் செய்துவரும் அன்பில் மகேஸ் அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் துறை அதிகாரிகளுக்கும் வாழ்த்துகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர்


# பரூக் அப்துல்லா பிறந்த நாள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

## “காஷ்மீர் மாநில உரிமைகளுக்காக சளைக்காமல் போராடுபவர்!”

சென்னை, அக். 22-

காஷ்மீர் மாநில உரிமைகளுக்காக சளைக்காமல் போராடுபவர் என்று தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவரும், நாட்டின் முதுபெரும் அரசியல் தலைவர்களுள் ஒருவருமான பரூக் அப்துல்லா அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவரும், நாட்டின் முதுபெரும் அரசியல் தலைவர்களுள் ஒருவருமான திரு. பரூக் அப்துல்லா அவர்களின் பிறந்தநாளில், காஷ்மீர் மாநிலத்தின் உரிமைகளுக்காகவும் மாண்புக்காகவும் சளைக்காமல் போராடும் அவரது போராட்டத்தை வணங்கி, அவர் நீண்டகாலம் மன அமைதியுடன் திகழ வாழ்த்துகிறேன். அவரது குரல் தொடர்ந்து நீதிக்கான வேட்கைக்கு ஊக்கமளிக்கட்டும்!**

**திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் தேசிய மாநாட்டுக் கட்சிக்குமான கொள்கை உறவு என்பது பேரறிஞர் அண்ணா காலந்தொட்டு இப்போது வரை, நமது ஒன்றியத்தின் மக்களாட்சி விழுமியங்களைக் காப்பதில் வலிமையுடன் தொடர்ந்து வருகிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## உயிரை துச்சமென மதித்து பணியாற்றும்

# காவலர்களின் தியாகத்தைப் போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, அக். 22-

உயிரை துச்சமென மதித்து பணியாற்றும் காவலர்களின் தியாகத்தைப் போற்றுவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**நாட்டின் எல்லையை இராணுவ வீரர்கள் பாதுகாப்பது போல், நமது வீடுகளைப் பாதுகாப்பவர்கள் காவல்துறையினர்!**

**தங்கள் உயிரையும் துச்சமென நினைத்துக் கடமையாற்றும் போது உயிர்த்தியாகம் செய்தோர்பலர்!**

**அந்த மாவீரர்களையும் அவர்களது தியாகத்தையும் போற்றி காவலர் வீரவணக்க நாளில் வீரவணக்கம் செலுத்துகிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## மூன்று முத்தான அறிவிப்புகளை அறிவித்த

# முதல்வருக்கு - தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் நன்றி!

## மாநிலத் தலைவர் த.அமிர்தகுமார் அறிக்கை!

*சென்னை, அக். 22 - தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் வைத்த மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றி மூன்று முத்தான அறிவிப்புகளை அறிவித்த முதல்வருக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில மையத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று மாநிலத் தலைவர் த.அமிர்தகுமார் தெரிவித்துள்ளார்.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத் தலைவர் த.அமிர்தகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில மையத்தின் கோரிக்கையை ஏற்று தீபாவளிக்கு மறுநாள் நவம்பர் 1 ஆம் தேதியை விடுமுறை நாளாக அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில மையத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*குடிமைப் பணிகள் கூட்டு மன்ற கூட்டத்தை நடத்துவதற்கு உத்தரவு, அதைத் தொடர்ந்து அகவிலைப்படி உயர்வுக்கான அறிவிப்பு, அதனைத் தொடர்ந்து நவம்பர் 1 ஆம் தேதி விடுமுறை நாளாக அறிவிப்பு ஆகிய மூன்று கோரிக்கைகளும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் வைத்த கோரிக்கை.*

*மூன்று முத்தான அறிவிப்புகளையும் அறிவித்து தமிழகத்தில் உள்ள அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

## கழக மருத்துவ அணி

# மாநில நிர்வாகிகளுக்கு பொறுப்பு மாவட்டங்கள்!


### மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

05/10/2024 அன்று நடைபெற்ற கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அடிப்படையில், கழக மருத்துவ அணியின் மண்டல பொறுப்பாளர்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்படுகிறார்கள்.

| பெயர், பொறுப்பு &தொலைபேசி எண் | பொறுப்பு மாவட்டங்கள் |
|---|---|
| **மரு.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. மருத்துவ அணித் தலைவர்.** | சென்னை தெற்கு, சென்னைதென் மேற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை வடக்கு, காஞ்சிபுரம் வடக்கு |
| **மரு.எம்.செந்தில்நாதன், துணைத் தலைவர்.** | ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு , கரூர் |
| **மரு.எ.வ.வே.கம்பன், துணைத் தலைவர்.** | திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, திருப்பத்தூர் |
| **மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. மருத்துவ அணிச் செயலாளர்.** | கன்னியாகுமரி மேற்கு, கன்னியாகுமரி கிழக்கு, திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி கிழக்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு |
| **மரு.இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. இணைச் செயலாளர்** | கடலூர் மேற்கு, கடலூர் கிழக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு |
| **மரு.ஆர்.கோகுல் கிருபாசங்கர், இணைச் செயலாளர்.** | நீலகிரி, கோவை மாநகர், கோவை தெற்கு கோவை வடக்கு, திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, திண்டுக்கல் மேற்கு, திண்டுக்கல் கிழக்கு |
| **மரு.ஆர்.இராஜேஸ்வரி மோகன்காந்தி, துணைச் செயலாளர்.** | வேலூர் மத்திய மாவட்டம், வேலூர் கிழக்கு (இராணிப்பேட்டை), கிருஷ்ணகிரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு |
| **மருஅஞ்சுகம் பூபதி, துணைச் செயலாளர்.** | தஞ்சை தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய மாவட்டம், திருவாரூர், நாகை மயிலாடுதுறை |
| **மரு.ஜெ.அருண், துணைச் செயலாளர்.** | திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய மாவட்டம் |
| **மரு.ஆர்.டி.அரசு, துணைச் செயலாளர்.** | காஞ்சிபுரம் தெற்கு |
| **மரு.ஆர் அண்ணாமலை துணைச் செயலாளர்** | புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, சிவகங்கை |
| **திரு எஸ்.ஏ.இரமேஷ், துணைச் செயலாளர்.** | அரியலூர், பெரம்பலூர் |
| **மரு.கலை கதிரவன், துணைச் செயலாளர்.** | சேலம் கிழக்கு, சேலம் மத்திய மாவட்டம், சேலம் மேற்கு, தருமபுரி மேற்கு, தருமபுரி கிழக்கு |
| **திருமதி ஆர்.திலகவதி ஜெயராஜ், துணைச் செயலாளர்.** | மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், |
| **திரு இராஜேஷ் பாபு, துணைச் செயலாளர்.** | நாமக்கல் மேற்கு, நாமக்கல்கிழக்கு, |
| **திரு மன்சூர் அலி கான், துணைச் செயலாளர்.** | தேனி வடக்கு, தேனி தெற்கு, |
| **திரு செண்பக விநாயகம், துணைச் செயலாளர்.** | தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, |
| **மரு.ஆர்.கே.திலீப் குமார் துணைச் செயலாளர்.** | இராமநாதபுரம், தூத்துகுடி வடக்கு, தூத்துகுடி தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21.10.2024

**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி



வேலூர் மாவட்டதி.மு.க. அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளிமாணவ – மாணவிகளுக்கிடையே கவிதைகள், திரைப்பட வசனங்கள், நாடக வசனங்கள் ஒப்புவித்தல் போட்டிகளை மாவட்ட கழக அவைத் தலைவர் தி.அ.முகமது சகி தொடங்கிவைத்தார். அருகில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில் குமார், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் சி.கோபி, மாவட்ட அமைப்பாளர் வீ.கிருபாகரன், தலைமை கழக நிர்வாகிகள் வேலூர் ரமேஷ், சேர்க்காடு கென்னடி, டாக்டர் எம்.ராஜேஸ்வரிமோகன்காந்தி, மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.வி.மகாலிங்கம், கவிஞர்கள் சி.கல்பனா,ம.வேல்முருகன்,பு.மயில்வாகணன், பொதுக் குழு உறுப்பினர்கள் சி.சந்திரசேகரன் எஸ்.கதிரேசன், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சரவணன், பகுதி கழக செயலாளர்கள் ஆர்.கே.ஐயப்பன்,முனவர்பாஷா, பி.முருகபெருமாள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சா.பரிமளம், டி.லோகநாதன், கலந்து கொண்டனர். முடிவில் பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் வீ.கே.கருணாநிதி நன்றி கூறினார்.

# ஆலங்குடி தொகுதி பார்வையாளர் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

*புதுக்கோட்டை, அக். 22-*

*புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தமிழக முதலமைச்சர் - தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாட்டிலுள்ள 234 தொகுதிகளிலும் பூத் கமிட்டி அமைத்தல், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் சேர்த்தல் / நீக்கல் உள்ளிட்ட தேர்தல் பணிகளை மேற்பார்வையிட தொகுதி பார்வையாளர்களை தலைமைக்கழகம் அறிவித்துள்ளது.*

*அதன்படி புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆலங்குடி தொகுதிக்கான தொகுதி பார்வையாளர் அறிமுகக் கூட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் முன்னிலையில் நாளை (23.10.2024 - புதன்கிழமை) மாலை 5.00 மணியளவில் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறும்.*

*மேற்படி ஆலங்குடி தொகுதி பார்வையாளர் அறிமுக கூட்டத்தில் ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர், மாவட்டக் கவுன்சிலர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இக்கூட்டம் நடைபெறும் தேதி, தொகுதி, தொகுதி பார்வையாளர், இடம் விவரம் வருமாறு:-*

*23.10.2024 மாலை 5 மணி - எழில் மாறன் செல்வேந்திரன், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர் - ஆலங்குடி ஆர்.கே. மஹாலில் நடைபெறுகிறது.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

## தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# தேனி தெற்கு மாவட்டத் தலைவர் நியமனம்

### சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

தேனி தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவராக நியமிக்கப்பட்ட கூத்தபெருமாள் மறைவெய்திய காரணத்தால், **எம்.சாதிக்பாட்ஷா** (80-பி, கம்பம்மெட்டு காலனி, கம்பம், உத்தமபாளையம் தாலுக்கா, தேனி மாவட்டம்) அவர்கள் தேனி தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.10.2024

**கார்த்திகேய சிவசேனாபதி**
செயலாளர்
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

## தி.மு.க. மகளிர் அணி

# கடலூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் அணியின் கடலூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கடலூர் கிழக்கு மாவட்டம்**
**கடலூர் மாநகரம்**

**தலைவர் - ஐ. பார்வதி**, ராஜாம்பாள் நகர், மஞ்சக்குப்பம், கடலூர்1,

**துணைத் தலைவர் - இ.செந்தில்குமாரி**, 45, இளம்வழுதி நகர், வன்னியர்பாளையம், கடலூர்1.

**அமைப்பாளர் -ரா.சுபாஷினி**, 10, பிள்ளையார்கோயில், தெரு, சொரக்கால்பட்டு, கடலூர்1.

**துணை அமைப்பாளர்கள் -** 1) த.சங்கீதா, 3/2, அங்காளம்மன் கோயில் தெரு, மஞ்சக்குப்பம், கடலூர்1, 2) ர. கவிதா, 70/16, மோகன் தெரு, கடலூர் ஒடி. 3) அ.சுதா, 7,மணாலி எஸ்டேட், புதுப்பாளையம், கடலூர்1. 4) சசிகலா ஜெயசீலன், 100, நவநீதா நகர், இரண்டாவது தெரு, திருப்பாப்புலியூர், கடலூர்2. 5) செ.விஜயலட்சுமி, 56எ, சுண்ணாம்புகாரத் தெரு, கடலூர்ஒடி.

**சமூக வலைதள அமைப்பாளர்கள் -** 1) பி. மேரிஜெனிபர், 74, புதிய சுனாமி நகர், சோனாங்குப்பம், கடலூர்1. 2) சொ.அன்புக்கரசி, 9/3, ஜெயின் தெரு, கடலூர்1.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.10.2024

**ஜெ.ஹெலன் டேவிட்சன்**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.ஆர்.பி.சீனிவாசன்

**அக்டோபர் 22 (2022)**



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக பணியாற்றியவர்.

நம்பரை ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.